## DEPOSITION OF WITNESS

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.149/2019**

**PW-5**

**Date :-07.07.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முத்துக்குமார் | Caste | |
| த/பெ. | திரு. நாகசுந்தரம் | Calling | காவல் ஆய்வாளர் |
| Village | SP பட்டினம் | Religion | |
| Taluk | இராமநாதபுரம் | Age | 52 /2026 |

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் SP பட்டினம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன் . இந்த வழக்கின் பட்டியல் சாட்சி 13 பாஸ்கர் ராஜா தற்போது பணி ஓய்வு பெற்று வேறு ஊரில் வசித்து வருவதாலும் , இந்த வழக்கின் பட்டியல் சாட்சி 14 சண்முகலெட்சுமி உதவி ஆய்வாளர் தற்போது பணிமாறுதலில் வேறு ஊருக்கு சென்றுவிட்டதாலும் நீதியின் நலன்கருதி காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு நீதிமன்ற அனுமதியின் பேரில் அவர்களுடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பை பார்த்து அவர்களுக்காகவும் நான் சாட்சியம் அளிக்கிறேன் . கடந்த 24.08.2013ம் தேதி ஜீயபுரம் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது பெட்டவாய்த்தலை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கர் ராஜா என்பவ்ர் பெட்டவாய்ததலை காவல்நிலையத்தில் நிலை ய பொறுப்பில் இருந்தபோது திருச்சி அட்லஸ் மருத்தவனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில் அங்கு சென்று உள்நோயாளியாகி சிகிச்சையில் இருந்த நாகவள்ளி என்பவரை பார்த்தபோது அவர்ப மயக்க நிலையில் இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்த லெட்சுமனன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய

குற்ற எண். 102/2013 சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் . **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியிடுசெய்யப்படுகிது.** பின்னர் இந்த வழக்கினை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 25.08.2013 அன்றுகாலை 07 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவி , சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் , லெட்சுமனன், கோமதி, ராமன், மருதை , ராமசாமி , ரவி சுரேஷ் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் . பின்னர் வழக்குகோப்பினை மேல் விசாரணைக்காக சண்முக லெட்சுமி என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். உதவி ஆய்வாளர் சண்முகலெட்சுமி இந்த வழக்கினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சிகிச்சையில் இருந்த நாகவள்ளி என்பவர் கடந்த 25.8.2013 அன்று இறந்துவிட்ட தகவலை பெற்று வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இ தசவிலிருந்து 279, 304(A) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார் . அந்த சட்டப்பிரிவு மாற்றுஅறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் இறந்துபோன நாகவள்ளி பிரேதத்தின் மீது அட்லஸ் மருத்துவமனை சவங்கிடங்கில் வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்பு பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக சத்யா பெண் காவலர் மூலம் திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார் . பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட அரசு பேருந்து TN-45 N-3166 என்ற பதிவு எண் கொண்டு ஆய்விற்காக மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பியுள்ளார். பின்னர் இவ்வழக்கின் எதிரியை பெட்டவாய்த்தலை காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறிகைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். இத்துடன் தனது விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக வழக்குகோப்புகளை என்னிடம் ஒப்படைத்தார் . நான் இந்த வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு சாட்சிகளை விசாரணை செய்தபோது

அவர்கள் உதவி ஆய்வாளரிடம் சொன்ன வாக்குமூலத்தை என்னிடமும் சொன்னதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. பின்பு விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்து TN-45 N-3166 என்ற பதிவு எண்கொண்ட பேருந்தை ஆய்வு செய்து அறிக்கைகொடுத்த மோட்டார் வாகன ஆய்வாளர் சித்ரா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து வாக ன ஆய்வறிக்கை பெற்றேன். வாகன அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பின்னர் விபத்தில் இறந்துபோன நாகவள்ளி என்பவரின் பிரேதத்தைபரிசோதனை செய்த திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவர் ரேணுகாதேவி என்பவரை விசாரித்துவாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனைஅறிக்கை பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. இறந்துபோன நாகவள்ளி என்பவருக்கு சிகிச்சையளித்த அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் நிவேதா சண்முகம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரிக்கு பணி நியமனம் செய்த அரசு பேருந்தின் பணி நியமன பொறுப்பாளர் குகானந்தம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறந்துபோன நாகவள்ளி என்பவரின் பிரேதத்தை திருச்சி அரசு மருத்துவமனை மருத்துவரிடம் அடையாளம் காட்டி ஆஜர் செய்த பெண் காவலர் சத்யா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கர் ராஜா மற்றும் முதல் விசாரணை செய்த உதவிஆய்வாளர் சண்முகலெட்சுமி ஆகியோர்களை விசாரித்து அவர்களது வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது 279, 304(A) இதசவின்கீழ் குற்ற இறுதி அறி்க்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

அ.சா. 2 கோமதி சம்பவம் குறித்து தன்கைப்பட காவல் நிலைத்தில் புகார் எழுதிக்கொடுத்ததாக தெரியவரவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் அ.சா.1, அ.சா.2 ரோட்டின் வடபுறம் நின்றிருந்தார்களா ,

அல்லது தென்புறம் நின்றிருந்தார்களா என்று சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. அ.சா.1 தனது விசாரணையில் பேருந்தின் வேகத்தில் காற்றின் வேகத்தால் இழுத்து பேருந்து மோதியதாக சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகளை இந்த வழக்கில் சரிவர விசாரணை செய்யவில்லை வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட புகார் வாக்குமூலம், பார்வைமகஜா, வரைபடம் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 லெட்சுமனனுக்கு இந்த சம்பவம் தொடர்பாக நேரடியாக தெரியாது என்றாலும் காவல் நிலையத்தில் காவலர்கிள் தூன்டுதலின்பேரில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த விபத்தானது எதிரியின் கவனக்குறைவாலும் அஜாக்கரதையாலும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சரிவர சாட்சிகளை விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/-xxxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
***Srirangam.***